பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

01 07 2025 **TUESDAY** 12 40 **PM**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. டிஜிட்டல் இந்தியா இயக்கம் நாட்டு மக்களின் வாழ்க்கையில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. மகாயோகி குரு கோரக்நாத் ஆயுஷ் பல்கலைக் கழகத்தை குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு இன்று தொடங்கி வைத்தார்.

3. இந்தியா – அமெரிக்கா இடையேயான நட்புறவு கடந்த 25 ஆண்டுகளில் வலுவடைந்துள்ளதுள்ளதாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

4. விருதுநகர் மாவட்டம், சாத்தூர் அருகே பட்டாசு ஆலையில் இன்று நேரிட்ட வெடிவிபத்தில் 6 பேர் உயிரிழந்தனர்.

5. ஆசிய இளையோர் டேபிள் டென்னிஸ் போட்டியின் 19 வயதுக்குட்பட்டோருக்கான பிரிவில் இந்தியாவின் சிண்ரல்லா தாஸ் - ஹன்சினி இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

**>>>>>><<<<<<**

டிஜிட்டல் இந்தியா இயக்கம் நாட்டு மக்களின் வாழ்க்கையில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இந்த இயக்கம் தொடங்கப்பட்டு பத்தாண்டுகள் நிறைவடைவதை ஒட்டி, அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், டிஜிட்டல் அதிகாரம் பெற்ற நாடாக மாற்றியமைத்து, தொழில்நுட்ப ரீதியாக முன்னேறிய சமுதாயத்தை உருவாக்கும் நோக்கில் இத்திட்டம் தொடங்கப்பட்டதாக குறிப்பிட்டுள்ளார்.

தற்போது பத்தாண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில், அதிகாரமளித்தலில் புதிய சகாப்தம் படைக்கப்பட்டிருப்பதாக அவர் கூறியுள்ளார்.

நாட்டு மக்களின் உறுதிப்பாடு காரணமாக, டிஜிட்டல் பணப்பரிவர்த்தனையில் இந்தியா பெரும் சாதனை படைத்திருப்பதாகவும் பிரதமர் பெருமிதம் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக, சுகாதாரம் மற்றும் கல்வித்துறை, டிஜிட்டல் இந்தியா இயக்கத்தின் மூலம் பெருமளவு பயனடைந்துள்ளதாகவும் திரு. நரேந்திர மோடி குறிப்பிட்டுள்ளார்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா வெளியிட்டுள்ள செய்தியில், டிஜிட்டல் இந்தியா இயக்கம், தொழில்நுட்பத்தை மக்களிடம் கொண்டு சேர்த்து, இந்தியாவை டிஜிட்டல் பயன்பாட்டில் முன்னணி நாடாக திகழச் செய்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசின் தொலைநோக்குப் பார்வை காரணமாக, நாட்டின்

டிஜிட்டல் கட்டமைப்பு மாற்றியமைக்கப்பட்டிருப்பதுடன், பொருளாதார வளர்ச்சியையும் ஊக்குவித்து வருவதாக கூறியுள்ளார்.

கடந்த பத்தாண்டு காலத்தில் ஏற்பட்ட டிஜிட்டல் புரட்சி இந்தியாவை உலக அரங்கில் டிஜிட்டல் வல்லரசாக மாற்றியமைத்துள்ளதாகவும் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<

உத்தரபிரதேச மாநிலம், கோரக்பூரில் அமைக்கப்பட்டுள்ள மகாயோகி குரு கோரக்நாத் ஆயுஷ் பல்கலைக் கழகத்தை குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு இன்று தொடங்கி வைத்தார்.

மேலும் அந்த பல்கலைக் கழகத்தின் கலையரங்கம், வகுப்பறைக் கட்டிடங்களை திறந்து வைத்த அவர், புதிய மகளிர் விடுதி கட்டிடத்திற்கும் அடிக்கல் நாட்டினார்.

இந்நிகழ்ச்சியில் அம்மாநில ஆளுநர் திருமதி. ஆனந்தி பென் பட்டேல், முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

>>>>>><<<<<<

இந்தியா – அமெரிக்கா இடையேயான நட்புறவு கடந்த 25 ஆண்டுகளில் மேலும் வலுவடைந்திருப்பதாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

வாஷிங்டனில் செய்தி நிறுவனம் ஒன்றிற்கு அவர் அளித்துள்ள பேட்டியில், பொருளாதாரம், தொழில்நுட்பம், கல்வி, பாதுகாப்பு, எரிசக்தி உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பு அதிகரித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இருநாடுகளுக்கும் இடையேயான வர்த்தக பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகவும், விரைவில் உடன்பாடு எட்டப்படும் என்றும் திரு. ஜெய்சங்கர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<

மத்திய எஃகு மற்றும் கனரக தொழில்துறை அமைச்சர் திரு. குமாரசாமி, ஐக்கிய அரபு எமிரேட்டில் இந்திய வம்சாவளியினரால் நடத்தப்படும் தொழில் நிறுவனங்களின் நிர்வாகிகளுடன் இருதரப்பு ஒத்துழைப்பு குறித்து ஆலோசனை நடத்தியுள்ளார்.

துபாயில் நடைபெற்ற இந்த சந்திப்பு, இந்தியா – ஐக்கிய அரபு எமிரேட் இடையேயான பொருளாதார ஒத்துழைப்புகளை அதிகரிக்கச் செய்வதோடு, தொழில்துறை ஒத்துழைப்பையும் வலுப்படுத்தும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

எஃகு மற்றும் கனரக தொழில்துறையில் புதிய முதலீடுகளை ஈர்ப்பது குறித்தும் இந்த சந்திப்பின் போது பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, தேசிய தாது மேம்பாட்டுக் கழகம் மற்றும் **Mecon** நிறுவனத்தின் அலுவலகங்களையும் துபாயில் அமைச்சர் திரு. குமாரசாமி திறந்து வைத்தார்.

>>>>>><<<<<<

தேசிய மருத்துவர்கள் தினம் இன்று கொண்டாடப்படுவதை ஒட்டி தலைவர்கள் பலரும் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

இந்நாளையொட்டி, பிரதமர் திரு. நரேந்திர மோடி வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், நாட்டின் சுகாதார கட்டமைப்பை வலுப்படுத்துவதில் மருத்துவர்களின் பங்களிப்பு பாராட்டுதலுக்குரியது என்று கூறியுள்ளார்.

மக்களின் ஆரோக்கியத்தை பாதுகாப்பதில் மருத்துவர்கள் முக்கிய பங்கு வகிப்பதாகவும் பிரதமர் அந்தப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெபி. நட்டா வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், மக்களின் உயிரை காப்பாற்ற இரவு பகல் பாராமல் அயராது பாடுபட்டு வரும் மருத்துவர்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், அரப்பணிப்பு, கருணை உள்ளத்துடன் சிறப்பான சேவையை வழங்கி வரும் மருத்துவர்களுக்கு இந்நாளில் நன்றி தெரிவித்துக் கொள்வதாக கூறியுள்ளார்.

மருத்துவர்களின் அயராத உழைப்பு நாட்டின் சுகாதாரத் துறைக்கு முதுகெலும்பாக திகழ்வதுடன், ஆயுஷ்மான் பாரத் இயக்கத்தை வெற்றியடையச் செய்திருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

தமிழக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், எளிய பின்புலங்களிலிருந்து வந்து தமிழகத்தின் மருத்துவ கட்டமைப்பை வலிமைப்படுத்தி, மக்கள் நலன் காக்கும் மருத்துவர்களுக்கு தமது வாழ்த்துக்களை உரித்தாக்குவதாக கூறியுள்ளார்.

>>>>>><<<<<<

விருதுநகர் மாவட்டம், சாத்தூர் அருகேயுள்ள சின்னக்காமன்பட்டியில் இயங்கி வந்த பட்டாசு ஆலையில் இன்று நேரிட்ட வெடிவிபத்தில் 6 பேர் உயிரிழந்தனர்.

படுகாயமடைந்த மூன்று பேர் சிவகாசி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>>><<<<<<

சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் அருகேயுள்ள மடப்புரம் கோவில் காவலாளி, காவல்நிலையத்தில் மரணம் அடைந்த சம்பவம் தொடர்பாக, அம்மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் திரு. ஆஷிஷ் ராவத் காத்திருப்போர் பட்டியலுக்கு மாற்றப்பட்டுள்ளார்.

அவருக்குப் பதிலாக, ராமநாதபுரம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. **Chandeesh** சிவகங்கை மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளராக கூடுதல் பொறுப்பு வகிப்பார் என்று மாநில அரசின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, இச்சம்பவம் தொடர்பான வழக்கை விசாரித்த உயர்நீதிமன்ற மதுரை கிளை, புலனாய்வு நடத்துவதற்கு தான் காவல்துறை உள்ளதே தவிர, அடிப்பதற்கு அல்ல என்று தெரிவித்துள்ளது.

காவல்நிலையத்தில் சிசிடிவி கேமராக்கள் முறையாக வேலை செய்கிறதா என்று கேள்வி எழுப்பிய நீதிபதிகள், மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளரை இடமாற்றம் செய்தது ஏன் என்று வினவியுள்ளனர்.

மேலும், உயிரிழந்த இளைஞரின் பிரேத பரிசோதனை அறிக்கையை தாக்கல் செய்யுமாறு மதுரை மருத்துவக் கல்லூரி முதல்வருக்கும், நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

**>>>>>><<<<<<**

தென்மேற்கு பருவமழை ஹிமாச்சலப்பிரதேசத்தில் வலுவடைந்துள்ளதால், மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

மழை காரணமாக மாநிலத்தின் பல பகுதிகளில் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளதாகவும், வெள்ளநீர் சூழ்ந்துள்ளதாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால், கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதிகபட்சமாக கடந்த 24 மணிநேரத்தில் **Mandi** மாவட்டத்தில் 21 சென்டிமீட்டர் மழை பெய்துள்ளதாகவும், அந்த மாநிலத்தில் வரும் 6ஆம் தேதிவரை பலத்த மழைக்கு வாய்ப்புள்ளதாகவும் வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

இதனிடையே, காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்து வரும் கனமழை காரணமாக, தமிழகத்தின் ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து 70 ஆயிரம் கனஅடியாக அதிகரித்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**>>>>>><<<<<<**

ஆசிய இளையோர் டேபிள் டென்னிஸ் போட்டியின், 19 வயதுக்குட்பட்டோருக்கான பிரிவில் இந்தியாவின் சிண்ரல்லா தாஸ் - ஹன்சினி இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

மகளிர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை 11-8, 11-6, 9-11, 11-18, 11-6 என்ற செட்கணக்கில் சிங்கப்பூரின் **Lai Chole – Ser Lin Qian** இணையை வென்றது.

ஆடவர் இரட்டையர் பிரிவிலும் **Ankur Batacharjee – Abinandh Pradhivadhi** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

**>>>>>>END<<<<<<**